இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 14.08.2026

# நிதி அமைச்சரின் ஆணவம்!

நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த நிதி அமைச்சர் மரியவில்சன், வாசிப்பில் மட்டுமல்ல, பொருட்பிழை ஏற்படும் வகையில் தான் தனது அறிக்கையை வாசித்தார். உச்சரிப்பில் தவறுகள் இருப்பது இயல்பு தான். நிதி அமைச்சராக இருக்கக் கூடியவர் எண்களைக் கூடச் சரியாகச் சொல்லவில்லை. இது பற்றி இணையத் தளங்களில் கடுமையான விமர்சனங்கள் அவர் மீது விழுந்து வருகின்றன. இது சட்டமன்றத்திலும் விவாதப் பொருள் ஆனது. இது தவறான விவாதம் ஆகாது.

**முன்பு கூட இது போன்ற விவாதங்கள் நடந்துள்ளது. முதலமைச்சராக தலைவர் கலைஞர் இருந்த போது ஒரு உறுப்பினர், 'எனது தொகுதியை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்வதற்கு மாறாக, 'எனது தொகுதியை எடுத்துக் கொல்லுங்கள்' என்று சொன்னார். 'நீங்களே உங்கள் தொகுதியைக் கொல்லக் கூடாது' என்றார் முதலமைச்சர் கலைஞர். அவையினர் அனைவரும் சிரித்தார்கள். அது போலத் தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய இயல்பு நிதி அமைச்சர் மரியவில்சனுக்கு இல்லை. இணையத்தில் விமர்சிப்பதற்கும் சேர்த்து சபையில் பதில் சொன்னார்.**

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. உறுப்பினர் தி.மு. ராசேந்திரன், மிகத் தன்மையாகத் தான் தனது கருத்தைச் சொன்னார்.

"மாண்புமிகு நிதி அமைச்சர், தென்கோடி முனையில் எங்களது குமரி முனையின் மாப்பிள்ளை என்ற முறையில் அவருக்கு எனது மதிப்பை பதிவு செய்கின்றேன். ஆனால் அவர் தனது பட்ஜெட்டை வாசிக்கிற போது, அவர் ஆங்கிலத்தில் பெரும்புலமை பெற்றவராக இருப்பார் என்று நினைக்கிறேன். ஆங்கில உச்சரிப்பு மிக நேர்த்தியாக இருந்தது. தமிழில் பல சொற்றொடர்களை அவர்கள் பேசாமல் விட்டுவிட்டார்கள். சில சொற்றொடர்கள் இலக்கணப் பிழையாக அமைந்தது. இதைக் குறையாகவோ குற்றச்சாட்டாகவோ இந்த அவையில் வைக்க விரும்பவில்லை. வருங்காலத்தில் பிழையின்றி பட்ஜெட் வாசிக்க வாய்ப்பு ஏற்பட வேண்டும். பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன்" என்று தான் உறுப்பினர் தி.மு.ராசேந்திரன் சொன்னார். இதில் ஒரு சொல் கூட தரக்குறைவானதாக இல்லை.

இதைக் கேட்டதும் ஒரு சிரிப்புடன் கடந்து போயிருக்கலாம். மாறாக, ஆத்திரம் கொண்டவராகப் பேசி இருக்கிறார் நிதி அமைச்சர். அதில் ஆணவம் மட்டுமே இருந்தது.

**"எனக்கு என்னுடைய கிறிஸ்தவம் ஒரு மொழியைக் கற்றுக் கொடுத்துள்ளது. அது அன்புமொழி, பண்புமொழி. இரக்கத்தின் மொழி. இது பாதிப் பேருக்கு எத்தனை தமிழ் படித்தாலும் புரியாது" என்று சொல்லி இருக்கிறார் நிதி அமைச்சர் மரியவில்சன்.**

**'ஆங்கிலம் படித்தவன் நான்' என்ற மேட்டிமை தான் இதில் இருக்கிறது. 'தமிழ் படித்தால் புரியாது' என்ற ஏளனம் தான் இதில் இருக்கிறது.**

இவர் தவறாகத் தமிழ் பேசுவதற்கும், தப்புத் தப்பாக எண்களைச் சொல்வதற்கும் கிறிஸ்துவத்துக்கும் என்ன தொடர்பு? நல்ல தமிழை வளர்த்ததில் கிறிஸ்துவ மதத்துக்கும் தொடர்பு உண்டு. வெளிநாடுகளில் இருந்து சமயப் பரப்புரைக்கு வந்த பாதிரியார்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டு மலையளவு. தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்துக்கு மொழி பெயர்க்கும் அளவுக்கு தமிழ்ப்பாதிரியார்கள் தொண்டாற்றி இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் மட்டுமல்ல, இப்போதும் தேவாலயங்களில் அழகான தமிழில், கனிவான குரலில், அழுத்தமாகப் பேசும் எத்தனையோ பாதிரியார்களைப் பார்க்கிறோம். இது எதையும் அறியாதவராக இருக்கிறார் அமைச்சர் மரியவில்சன்.

தனது தவறான தமிழுக்கு கிறிஸ்தவத்தின் மீது பழிபோடும் பாவத்தையும் சேர்த்துச் செய்துள்ளார் மரியவில்சன். இப்படித்தான் பேசுவேன், இது என்னுடைய ஸ்டைல் என்பது எல்லாம் சபை மாண்பை மதிக்காத போக்கு ஆகும்.

'இதெல்லாம் எத்தனை தமிழ் படித்தாலும் தெரியாது' என்கிறார் மரியவில்சன். மதத்தையும் மொழியையும் எதற்காக ஒப்பிட வேண்டும்? தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மதத்தின் பின்னால் எதற்காக ஒளிந்து கொள்ள வேண்டும்? ஒழுங்கான தமிழைப் படிக்கப் படிக்கத்தான் ஒவ்வொன்றும் ஒழுங்காகவே தெரியும்.

**இங்கே பிரச்சினை என்பது அவர் பேசும் மொழியில் இல்லை. மதத்தில் இல்லை. மரிய வில்சனிடம் தான் பிரச்சினை இருக்கிறது. கிறிஸ்தவத்தில் இருந்து அன்பையோ, பண்பையோ அவர் கற்றுக் கொள்ளவில்லை என்பதைத் தான் அவரது பேச்சு எடுத்துக் காட்டுகிறது.**

**இவருக்கு அன்பு மொழியோ, பண்பு மொழியோ, இரக்க மொழியோ தெரியாது என்பதற்கு அவர் உருட்டுக் கட்டையைத் தூக்கிக் கொண்டு சொந்தக் குடும்பத்தினரைத் தாக்கும் காட்சிகளே சாட்சி.**

**நிதி அமைச்சரான இவர், கட்டையைத் தூக்கி ஒரு குடும்பத்தைத் தாக்கும் வீடியோ இணையத் தளத்தில் பரவி அனைவரும் பார்த்த காட்சிகள் ஆகும். மரிய வில்சனுக்கும் அவரது அண்ணன் மரிய குளோத்துக்கும் இடையே சொத்துப் பிரச்சினை இருந்துள்ளது. 8.8.2022 ஆம் நாள் புதுச்சேரியில் உள்ள மரிய குளோத்தின் வீட்டுக்கு சென்று அவரையும் அவரது மனைவியையும் கட்டையை வைத்து தாக்கி இருக்கிறார் மரிய வில்சன். கதறக் கதற தாக்கி இருக்கிறார். வீட்டில் இருந்த பொருட்களையும் அடித்து உடைத்துள்ளார். கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இது தொடர்பாக லாஸ்பேட்டை காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டது. மரிய வில்சன், அவரது அப்பா நெஸ்தோஸ் ஆகியோர் மீது ஆறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதியப்பட்டுள்ளது. நீதிமன்றத்துக்கு அலைந்து கொண்டிருக்கிறார் நிதி அமைச்சர். அதனைத் தான் அவர் அவைக்குள்ளும் காட்டுகிறார்.**

சினிமாவில் நடிக்கும் போது விஜய்யாக இருந்தவர், கட்சி ஆரம்பித்ததும் 'ஜோசப் விஜய்'யாக அடையாளம் காட்டிக் கொண்டதைப் போல, தனது மத அடையாளத்தைக் காட்டி கழிவிரக்கம் தேடப் பார்க்கிறார் மரியவில்சன்.

**இவருக்கு தமிழும் தெரியவில்லை. கிறிஸ்தவமும் தெரியவில்லை. சபை மாண்பும் தெரியவில்லை. பொது நாகரிகமும் தெரியவில்லை.**



சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு இணைச் செயலாளர் ஜெரால்டு அவர்கள் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாட்டில் லோக் ஆயுக்தாவின் அமைப்பு, செயல்பாடு மற்றும் நிறுவன செயல்திறன் குறித்து ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றுள்ளார். அதேபோல், அவரது மனைவி சார்லட் ஜெரால்டு, வேல்ஸ் பல்கலைக் கழகத்தில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் கற்பித்தல் திறன், தொழில்சார் ஏற்புத்திறன் மற்றும் பணிப் பொறுப்புணர்வு ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தி, கற்பித்தல் தொழில் குறித்த அவர்களின் அணுகுமுறை குறித்து ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

இந்நிலையில், முனைவர் பட்டம் பெற்ற தம்பதியினர் முனைவர் ஜெரால்டு, முனைவர் சார்லட் ஜெரால்டு ஆகியோர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து, தங்களின் ஆய்வு அறிக்கை மற்றும் பட்டத்தை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். இந்த சந்திப்பின் போது, பொதுச் செயலாளர் துரைமுருகன், துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி.சா.மு.நாசர் ஆகியோர் உடனிருந்தனர்.

### காவல்துறை அலட்சியம் ஏன்? கோவையில்

# மாணவன் அமுதன் கொலைக்கு நீதி வேண்டும்!

## பேரவையில் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஆக. 14 -**

**கோவையில் கல்லூரி மாணவன் அமுதன் கொலையில் காவல் துறை ஏன் இவ்வளவு அலட்சியமாக நடந்து கொள்கிறது என்றும், கண்டிப்பாக இந்தக் கொலைக்கு நீதி வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

கோவை, ஒத்தக்கால் மண்டபம் பகுதி தனியார் பொறியியல் கல்லூரியில், மூன்றாம் ஆண்டு படித்து வந்த மாணவர் அமுதன், 20 பேர் கொண்ட கும்பலால், அதுவும் அவருடன் படிக்கின்ற மாணவர்களாலேயே அடித்து கொல்லப்பட்டுள்ள சம்பவம் குறித்து, சட்டப்பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:-

"பேரவைத் தலைவர் அவர்களே,

இன்றைக்கு தமிழ்நாடே அதிர்ச்சி அடைகின்ற அளவுக்கு, நேற்று முன்தினம் ஒரு சம்பவம் கோவையில் நடந்திருக்கிறது. கோவை ஒத்தக்கால் மண்டபம் பகுதியில் இருக்கின்ற ஒரு தனியார் பொறியியல் கல்லூரியில், மூன்றாம் ஆண்டு படித்து வந்த மாணவர் அமுதன். நேற்று 20 பேர் கொண்ட கும்பலால், அதுவும் அவருடன் படிக்கின்ற மாணவர்களாலேயே அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். இதை ஏதோ ஒரு தனிநபர் சம்பவமாக, நாம் பார்க்க முடியாது. இதற்கு அரசு பொறுப்பேற்க வேண்டும்.

ஏனென்றால், வழக்கு விசாரணைக்காக மாணவர் அமுதனை, நேற்று முன்தினம் கோவை, செட்டிப்பாளையம் போலீசார் வரச்சொல்லியிருக்கிறார்கள். அப்போது,



மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் விற்கிற சிலரைப் பற்றி அமுதனிடம் காவல்துறையினர் விசாரித்துள்ளார்கள். தகவல் வாங்கியிருக்கிறார்கள்.

அந்தத் தகவலை இரகசியமாக வைத்து குற்றவாளிகளைப் பிடித்து, போதைப் பொருட்களைப் பறிமுதல் செய்ய வேண்டிய காவல்துறை, போதைப்பொருள் விற்ற நபர்களை அழைத்து, புகார் கொடுத்தவர் பற்றிய தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கோபத்தில்தான் மாணவர் அமுதனை அந்தக் கும்பல் அடித்துக் கொலை செய்து விட்டதாக அமுதனின் பெற்றோர், ஊடகங்களில் பேட்டி கொடுத்திருக்கிறார்கள்.

காவல்துறை ஏன் இவ்வளவு அலட்சியமாக நடந்து கொள்கிறது என்று இந்த அரசு விளக்கம் கொடுக்க வேண்டும். இனியும் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல், இந்த அரசு பார்த்துக் கொள்ள வேண்டும். மாணவர் அமுதனின் கொலைக்குக் கண்டிப்பாக நீதி கிடைக்க வேண்டும்."

இவ்வாறு சட்டப் பேரவையில், கோவை சம்பவம் குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### எப்.சி.ஆர்.ஏ. சட்டத் திருத்த மசோதா சிறுபான்மையினர் நடத்தக்கூடிய

# தொண்டு நிறுவனங்கள் மீது நடத்தப்படும் மிகப் பெரிய தாக்குதல்!

## சட்டப்பேரவையில் எப்.சி.ஆர்.ஏ. சட்டத் திருத்த மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தும் தீர்மானத்தில் எஸ்.ஆஸ்டின் பேச்சு!

சென்னை, ஆக. 14 -

எப்.சி.ஆர்.ஏ. சட்டத் திருத்த மசோதாவை திரும்பப் பெற வேண்டும் என்ற தீர்மானத்தில் கழகம் சார்பில் வரவேற்று எஸ்.ஆஸ்டின் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள 'வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2026ஐ அதன் தற்போதைய வடிவில் திரும்பப் பெறுமாறு ஒன்றிய அரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது' என்ற அரசு கொண்டு வந்த தனித் தீர்மானத்தினை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது, ஆதரிக்கிறது.

இந்த மசோதா மிகவும் ஆபத்தான, புதிய அதிகாரங்களை உருவாக்குகிறது. இந்தத் திருத்த மசோதாவை திரும்பப் பெறக்கோரி, இந்த மசோதாவில் உள்ள பாதிப்புகளைக் குறித்து விளக்கமாகத் தெரிவித்து, சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பே 3.4.2026 அன்று எங்களுடைய தலைவர், திராவிட மாடல் அரசினுடைய நாயகர், முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்கள், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், தேர்தல் முடிந்தபிறகும்கூட தொடர்ந்து எங்களுடைய தலைவர் அவர்கள், எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பி. வில்சன் அவர்களுடைய தலைமையில் இந்தியா முழுவதுமுள்ள 16 சிறுபான்மை மதத் தலைவர்களை உள்ளடக்கிய *Joint Action Forum on Minorities* என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார்கள்.

அந்த அமைப்பு, பி. வில்சன், M.P. அவர்களுடைய தலைமையில், 6.8.2026 அன்று உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களைச் சந்தித்து, சுமார் ஒரு மணி நேரம் இந்தச் சட்டத் திருத்தத்தில் உள்ள பாதிப்புகளையெல்லாம் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, இந்த மசோதாவைத் திரும்பப் பெற வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்கள்.

**சிறுபான்மையின மக்கள் மீது தாக்குதல்!**

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதா சிறுபான்மையினர் நடத்தக்கூடிய தொண்டு நிறுவனங்கள்மீது நடத்தப்படும் மிகப்பெரிய ஒரு தாக்குதலாகும். இந்தச் சட்டத்தில் உள்ள பிரிவு 16A (5)ன்படி, தானாகவே முடிவுக்கு வருதல் என்ற ஒரு புதிய வரையறை கொண்டுவரப்பட்டுள்ளது. அதாவது, இந்த வரையறையின்படி, தொண்டு நிறுவனங்கள் FCRA licenceஐ புதுப்பிக்கவில்லை என்றாலோ அல்லது அரசு FCRA licenceஐ புதுப்பிக்க மறுத்தாலோ அல்லது நிர்வாக ரீதியாக ஏதாவது ஒரு தாமதம் ஏற்பட்டாலோ, சிறுபான்மையினர்கள் நடத்தக்கூடிய தொண்டு நிறுவனங்களின் உரிமை, தானாகவே இரத்து செய்யப்பட்டுவிடும். அதற்கான காரணம் சொல்ல வேண்டிய எந்த அவசியமும் இந்தத் திருத்தச் சட்டத்தில் இல்லை. அவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்பதைக்கூட சொல்லாமல், அவர்களுடைய உரிமை முழுமையாக இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக பறிக்கப்பட்டுவிடுகிறது.

இன்னும் ஒன்றிரண்டு பிரிவுகள் இந்தச் சட்டத்தில் இருக்கின்றன. இந்தச் சட்டத்தில் உள்ள பிரிவு 16A (3) மற்றும் (6)ன்படி,



நிர்ணயிக்கப்பட்ட அதிகார அமைப்பு என்ற புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு ஒன்றிய அரசால் தனியாக ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். சிறுபான்மை அமைப்புகள் நடத்தக்கூடிய தொண்டு நிறுவனங்களை மிரட்டுவதற்காக, அமலாக்கத் துறை போல செயல்பட இந்தப் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்று நாங்கள் கருதுகின்றோம். இந்த அமைப்பின் மூலமாக தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கிறித்துவ வேதாலயங்கள் உட்பட அனைத்து சொத்துகளையும் பறிமுதல் செய்ய முடியும். குறிப்பாக, பள்ளிகள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர் இல்லங்கள், நிலங்கள் உட்பட அனைத்தையும் அந்தக் குறிப்பிட்ட அதிகாரி அவரது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும்.

**தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்படும்!**

இந்த மசோதாவில் மிகவும் கொடூரமான பகுதி என்னவென்றால், திருத்தத்திலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதி 16A (1) மற்றும் (2)ன்படி, உரிமையாதல் என்ற ஒரு குறிப்பு அங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த உரிமையாதல் பிரிவின்படி தொண்டு நிறுவனத்தினுடைய சொத்துக்கள் வெளிநாட்டு நிதிகள் மூலமாகவோ அல்லது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதிகள் கலந்திருந்தாலும் சரி, இந்த FCRA திருத்த மசோதா நிறைவேறிய உடனேயே, உரிமைகளை இழக்கக்கூடிய தொண்டு நிறுவனங்களினுடைய முழு சொத்துக்களும் ஒன்றிய அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் போய்விடும். ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டிருக்கும் அந்த அதிகாரி, அந்தச் சொத்துக்களை அரசுத் துறைக்கு மாற்றலாம் அல்லது விற்கலாம், விற்ற பணத்தை அரசின் தொகுப்பு நிதிக்கு, அதாவது Consolidated Fund என்ற நிதிக்கு கொண்டு செல்லப்படலாம். இதில் தொண்டு நிறுவனங்களின் உரிமை, முழுமையாகப் பாதிக்கப்படுவதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.

மேற்சொன்ன திருத்த விதிகளுடைய தாக்கத்தைப் பார்க்கின்றபொழுது, 50 ஆண்டுக்காலமாக நாம் கட்டிக் காத்த பள்ளிகள், மருத்துவமனைகள், முதியோர் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்கள் உள்ளிட்ட சமூகநல அமைப்புகள் அனைத்தும், ஒரே கையெழுத்தில் ஒன்றிய அரசினுடைய கைகளுக்குச் சென்றுவிடும். ஏழை மற்றும் கிராமப்புற மக்களுக்கு அவர்கள் பெற்று வந்த சேவைகள் முற்றிலுமாக முடக்கப்பட்டுவிடும். இந்தச் சட்டத் திருத்த மசோதா என்பது சட்டத்தின் பெயரிலேயே, துப்பாக்கி முனையில் அடிக்கப்படும் மிகப்பெரிய கொள்ளை மட்டுமல்ல, இது ஒரு சட்டப்பூர்வமான திருட்டுமாகும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும் இந்த மசோதா, இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகளை நேரடியாக மீறுகிறது. அரசியலமைப்பு உறுப்புரை 25மத சுதந்திரம், அரசியலமைப்பு உறுப்புரை 26மத விவகாரங்களை நிருவகிப்பதற்கான சுதந்திரம், அரசியலமைப்பு உறுப்புரை 29 மற்றும் 30சிறுபான்மையினரின் கல்வி உரிமைகள், அரசியலமைப்பு உறுப்புரை 300A சொத்துரிமை என இவை அனைத்தையும் இந்த மசோதா புறக்கணித்திருக்கின்றது.

இந்தத் திருத்த மசோதா இயற்கை நீதிக்கு எதிராக உள்ளது மட்டுமல்ல, தொண்டு நிறுவனங்களைக் கேட்காமல், காரணம் சொல்லாமல், விசாரணை இல்லாமல், அவற்றின் சொத்துக்களைப் பறித்துக் கொள்வது என்பது அடிப்படை உரிமையையே மீறுவதாகும். திராவிட முன்னேற்றக் கழகம் எங்களுடைய தலைவருடைய தலைமையில், தொடர்ந்து இந்த மசோதாவை திரும்பப் பெறுவதற்கான அனைத்து முன்னெடுப்புகளையும் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

எனவே, இன்றைக்கு இந்த மசோதாவை திரும்பப் பெறுவதற்கான தனித் தீர்மானத்தைக் இந்த அரசும் கொண்டுவந்திருக்கிறது. அரசு கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை நாங்கள் வரவேற்பதோடு, இந்தத் தீர்மானத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெறுவதற்கான அனைத்துத் தொடர் நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்தத் தீர்மானத்தை வரவேற்று நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆஸ்டின் பேசினார்.